Registered as a NewsPaper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE ELEANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 07 (19 - 04 - 1992) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 61

நல்லூர் கிளை நூலகம்
மாநகரசபை
யாழ்ப்பாணம்

## பேச்சுக்களை ஆரம்பிக்க யாழ். ஆயர் வேண்டுகோள்

பேச்சு வார்த்தை முயற்சிகள் உடனடியாக ஆரம்பிக்கப்படல் வேண்டுமென யாழ். மறைமாவட்ட ஆயர் அதிவண. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஆயர் பணியிலிருந்து ஓய்வுபெற இருக்கும் அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் கண்காணிப்புடன் கூடிய போர் நிறுத்தம் அமுலுக்கு கொண்டு வரப்பட வேண்டும் எனவும், பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

# பெரும் படையெடுப்பால் மக்கள் அழிந்தால் சமாதானத்திற்கான கதவுகள் மூடப்படும்

## அரசுக்குதலைவர் பிரபா எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

"தமிழ் மண் மீது பெரும் ஆக்கிரமிப்பு நடத்தப்பட்டு தமிழ் மக்கள் பெரும் தொகையில் கொன்று குவிக்கப்பட்டால் நாம் திறந்துவைத்திருக்கும் சமாதானக் கதவு மூடப்பட்டுவிடும் என்பதை தெட்டத் தெளிவாக எடுத்துக்கூற விரும்புகிறேன்."

இவ்வாறு தலைவர் பிரபாகரன் அன்னை பூபதியின் நினைவு நாளை முன்னிட்டு விடுத்துள்ள செய்தியில் சிங்கள அரசை எச்சரித்துள்ளார்.



அன்னை பூபதியின் நினைவு நாளையொட்டி தலைவர் பிரபாகரன் விடுத்த அறிக்கையின் முழு விபரமும் வருமாறு:

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே,

மனித வரலாற்றில் என்றுமே நிகழ்ந்திராத, எவருமே சாதித்திராத, மகத்தான மனித அர்ப்பணிப்புக்களைக் கொண்டதாக எமது விடுதலைப் போராட்டம் புகழீட்டி நிற்கிறது. இந்த அற்புதமான தியாக வரலாற்றில் அன்னை பூபதி ஓர் உன்னதமான, தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளார்.

சத்தியத்திற்காகச் சாகத் துணிந்துவிட்டால் ஒரு சாதாரண மனிதப் பிறவியும் சரித்திரத்தைப் படைக்க முடியும். இதற்கு அன்னை பூபதியின் தியாகம் ஒரு சிறப்பான எடுத்துக் காட்டு. சத்தியத்திற்காக, தர்மத்திற்காக அவர் சாவை அரவணைத்துக்கொண்டார். இந்த ஒப்பற்ற ஈகையால் ஒரு சாதாரண தாயான அவர் அசாதாரணசாதனையைப்புரிந்து தேசியத் தாய் என்ற அந்தஸ்த்திற்கு உயர்ந்தார்.

## அறப் போரிலும் ஆயுதப் போரிலும் உலக சாதனை படைத்துள்ளோம்

## விடுதலைப்புலிகளுக்கு தடை நல்ல முடிவு எடுப்போம் - இந்திய பிரதமர்

(சென்னை)

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வது குறித்து ஆக்கபூர்வமான முடிவு எடுக்கப் படும் என்று பிரதமர் பி.வி. நரசிம்மராவ் தெரிவித்தார்.

இப்போது இந்தப் பிரச்சினையின் அனைத்து அம்சங்கள் குறித்தும் உள்துறை அமைச்சு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

திருப்பதி காங்கிரஸ் மகாநாட்டில் கலந்து கொண்டு விட்டுப் புதுடில்லிக்குத் திரும்பும் வழியில் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் செய்தியாளரிடம் அவர் பேசினார்.

இரண்டு தீவிரவாதிகளை ஒப்படைக்கும் படி லிபியா கட்டாயப் படுத்தப்படுவது போல இந்தியாவும் புலிகளைத் தம்மிடம் ஒப்படைக்கும் படி சிறிலங்காவை கேட்குமா என்று அவரிடம் வினாவிய போது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தடையைமீறி புலிகளுக்கு சிகிச்சை அளிப்பேன் - டாக்டர் ராமதாஸ்

(சென்னை)

விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்டாலும் அத் தடையை மீறி காயமுற்ற விடுதலைப் புலிப் போராளிகளுக்கு தான் சிகிச்சை அளிக்கப் போவதாக பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸ் கூறியுள்ளார்.

மதுரையில் பொதுக் கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில் விடுதலைப் புலி ஒருவரைத் தான் இதுவரை பார்த்ததில்லை எனவும், யுத்தத்தில் காயமடையும் புலிகளுக்கு தான் சிகிச்சை அளிப்பேன் எனவும், நான் ஒரு டாக்டர் என்பதால் பயமின்றி என்னிடம் சிகிச்சை பெற வருமாறு நான் புலிகளுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் சகல வழிகளிலும் நாங்கள் புலிகளுக்கு ஆதரவு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் துணிகர தாக்குதல் வெங்காலையில் 10 படை பலி

(மன்னார்)

மன்னார் மாவட்டம் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் மீது வங்காலை சந்தியில் ... திடீர் தாக்குதலொன்றை மேற்கொண்டனர். இத் தாக்குதலினால் 10க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பதினொரு நவீன ... கைப்பற்றப்பட்டன.

இத் தாக்குதல்பற்றி மேலும் தெரியவருவதாவது, நேற்றுக் காலை 9.45 மணியளவில் தள்ளாடி இராணுவ ... ருக்கு ஆதரவாக தள்ளாடி, வங்காலை முகாம்களிலிருந்து கவச வாகனங்கள் சகிதம் வெளியேறிய சிறிலங்கா

# உலக சாதனை படைத்துள்ளோம்

அறப் போரிலும் சரி, ஆயுதப் போரிலும் சரி எமது விடுதலைப் போர் உலகசாதனைகளைப் படைத்து வருகிறது. மனித ஈகையின் சிகரத்தை எட்டியிருக்கிறது

அகிம்சையின் அறத்தையும் ஆன்மீக தர்மத்தையும் போதித்து வந்த பாரத நாடு, ஆக்கிரமிப்புப் பூதமாக, அன்றொருநாள், எம் மண் மீது கால் மிதித்தது. அப்பொழுது, எமது போராளி ஒருவன் பாரதத்தின் ஆன்மீக மரபில் அறப்போரைத் தொடுத்தான். காந்தி அடிகளின் சாத்வீக தத்துவத்தை பாரத நாட்டிற்கு புகட்டிக் காட்ட விரும்பினான். ஆன்மீக உறுதிப்பாட்டின் அதியுயர்ந்த அர்ப்பணிப்பாக அவனது உயிர்த்தியாகம் அமைந்தது. திலீபனின் தியாகம் காந்தியின் அறக் கோட்பாட்டிற்கு ஒரு மகோன்னதமான செயற்பாட்டு வடிவம் கொடுத்தது. பாரதத்தில் மடிந்து போன ஆன்மீகம் தமிழீழத்தில் புதுப் பொலிவுடன் புரட்சி வடிவத்தில் மறுபிறப்பு எடுத்தது.

திலீபனின் தியாகம் இந்திய மாயையைக் கலைத்தது. தமிழீழ தேசிய உணர்வைக் கட்டி எழுப்பியது. இந்தத் தேசிய எழுச்சியின் வெகுசன வடிவமாக அன்னையின் அறப்போர் அமைந்தது.

# நீதியில் நெருப்பில் எரிந்தாள் அணையாத சுதந்திர தீபமானாள்

அந்த வயோதிபத்தாய் நீதியின் நெருப்பில் தன்னை எரித்துக் கொண்டாள். அந்தத் தீ, என்றும் அணையாத சுதந்திர தீபமாக, எம்முன் இன்றும் எரிந்து கொண்டிருக்கிறது.

தேசிய விடுதலையை முன்னெடுக்கும் புரட்சிகர இயக்கம் என்ற ரீதியில் புலிகள் இயக்கமானது காலத்திற்குக் காலம், வரலாற்றுத் தேவைகளுக்கேற்ப, புதிய போராட்ட உத்திகளை அறிமுகம் செய்திருக்கிறது. அத்துடன் அந்தப் போராட்ட முறைக்கு முன்னுதாரணமாகவும், இலக்கணமாகவும் திகழ்ந்து அற்புதமான அர்ப்பணிப்புகளையும் செய்துள்ளது. இன்று எமது விடுதலைப் போராட்டம் ஒடுக்கப்படும் உலகிற்கு ஒரு முன்மாதிரியாக, வழிகாட்டியாக திகழ்வதற்கும் இந்த தனித்துவமான பண்புகள்தான் காரணம்.

போர் முறையில் நாம் காட்டும் தீவிர அக்கறை போன்றுதான் சமாதான வழிமுறையிலும் நாம் நேர்மையான அணுகுமுறையைக் கடைப்பிடித்தோம். பல தடவைகள் போர் நிறுத்தம் செய்து சமாதானப் பேச்சுக்களில் பங்கு கொண்டோம். இன்றும் சமாதானத்தின் கதவுகளை அகலத் திறந்துவிட்டிருக்கிறோம்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

# தியாகச்சுடர் அன்னைபூபதி நினைவு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதி அவர்களின் நான்காம் ஆண்டு நினைவு நிகழ்ச்சிகளின் இறுதிநாளான இன்றுவல்வெட்டித்துறை அம்மன் கோவிலடியில் அடையாள உண்ணாவிரதமும், நினைவுக் கூட்டமும் இடம் பெறவுள்ளது. கடற்புலிகளின் சார்பாக வடமராட்சிப் பகுதியில் ஏற்பாடு செய்யப்படும் இந்த நிகழ்ச்சியில் காலை எட்டு மணிமுதல் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்படவிருப்பதுடன், பிற்பகலில் பொதுக்கூட்டமும் நடைபெறவுள்ளது வடமராட்சிப் பிரிவு அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் தலைமையில் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்தில் திரு. வாஞ்சிநாதன், செல்வி ஆர்த்தி, திரு தங்கன், திரு. நாவண்ணன் ஆகியோர் உரையாற்ற

(4 ஆம் பக்கம் பார்க்க)

ளாடி இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் மீது வங்காலை சந்திக்கு அண்மையில் வைத்து விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர். இத் தாக்குதலினால் 10க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பதினொரு நவீன ரக துப்பாக்கிகளும் பெருமளவுஇராணுவப்பொருள்களும்

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

மன்னார் மாவட்டம் தள்ளாடி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று வெளியேறிய இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலின்போது 11 நவீன ரக துப்பாக்கிகளும் பல இராணுவப் பொருள்களும் கைப்பற்றப்பட்டன. அவற்றின் விபரம் வருமாறு:

- ★ மினிமினி இலகுயந்திர துப்பாக்கி - 01
- ★ எவ்.என்.சி போல்டிங்பட் ரக துப்பாக்கி - 03
- ★ எவ்.என்.சி. சொலிட்பட் ரக துப்பாக்கி - 02
- ★ ரி-56-2 ரக துப்பாக்கி - 01
- ★ ரி-56 பட் ரக துப்பாக்கி -02
- ★ ரி-81 ரக துப்பாக்கி - 02
- ★ மினிமினி இலகுயந்திர துப்பாக்கிக்குரிய தொடர் ரவைகள் - 300
- ★ ரி-81 ரவைக் கூடுகள் - 06
- ★ ஏ.கே. ரவைக்கூடுகள் - 13
- ★ நடுத்தர ரவைகள் - 927
- ★ 5.56 மிமீ ரவைகள் - 1257
- ★ ஜே ஆர் கைக்குண்டு -17
- ★ தொலைத் தொடர்பு சாதனம் - 01
- ★ ஏ கே. கோல்சர் - 05
- ★ ஜக்கட் கோல்சர் - 01
- ★ சப்பாத்து சோடி - 05
- ★ தொப்பி - 03
- ★ மழைக்கோட் - 02
- ★ கிற்பாக் - 02

இத் தாக்குதல்பற்றி மேலும் தெரியவருவதாவது, நேற்றுக் காலை 9.45 மணியளவில் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து வீதிகளை துப்புரவு செய்யவென 35 க்கு மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் வெளியேறி வந்தனர். இவர்கள் மீது வங்காலைச் சந்திக்கு அண்மையிலுள்ள மூன்று மைல் நீளமான பரந்த வெளியில் வைத்து விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலின் போது 10 க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடினர்.

இந்த இராணுவ அணியின ...ருக்கு ஆதரவாக தள்ளாடி, வங்காலை முகாம்களிலிருந்து கவச வாகனங்கள் சகிதம் வெளியேறிய சிறிலங்கா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

### கப்டன் காசிம் லெப். நரேன்

மன்னார் மாவட்டம் தள்ளாடி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று வெளியேறிய இராணுவத்தினருடனான மோதலில் கப்டன் காசிம் (சபரியூட் ரெட்னபாலா பனங்கட்டிக் கொட்டு, மன்னார்), லெப்டினன்ட் நரேன் (தந்தியோதால்மேதா

[4 ஆம் பக்கம் பார்க்க]

# தெரிவுக்குழுவின் யோசனையுடன் புத்த பிக்குகள் யாழ். புறப்பாடு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக பத்துப் பேர் அடங்கிய பௌத்த குருமார் குழு ஒன்று நேற்றுக் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் புறப்பட்டதாகக் கொழும்புச்செய்திகள் ஊர்ஜிதம்செய்கின்றன.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாகப் பாராளுமன்றத்தினால் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு, தமிழீழ விடுதலைப்புலிகள் தலைமைப் பீடத்திற்கு அனுப்பியுள்ள செய்தியையும் பௌத்த குருமார் குழு தம்முடன் எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்னிலங்கையைச்சேர்ந்த வண பலப்பிட்டியசித்தார்த்த மகாநாயக்கதேரோ இந்தப் பிக்குகள்குழுவுக்குத் தலைமை தாங்கி வருகின்றார்.

வடக்கில் இவர்கள் ஐந்து நாட்கள்வரை தங்கியிருப்பார்கள் என்றும், தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப்பேசலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் செய்தி கூறுகிறது.

தற்போதைய போருக்கான முழுத் தீர்வை எமது தூதுக்குழு எடுத்துச் செல்லவில்லை ஆனால் போரை நிறுத்தத் தமது தீர்வு என்ன என்பதை புலிகள் விபரிக்க வேண்டும் என்று அவர் கேட்டிருக்கிறார்

(3ஆம் பக்கம் பார்க்க)

# உலகப் பெண்ணினத்திற்கு பெருமை தேடிய அன்னைபூபதி

## மகளிர் முன்னணி புகழாரம்

"அன்னை பூபதி தமிழீழப் பெண்ணினத்திற்கு மட்டுமல்லாது உலகப் பெண்ணினத்திற்கே பெருமை சேர்த்தவர். உலகில் இதுவரை எந்தப் பெண்ணுமே செய்திராத தியாகம் அன்னையினுடையது. அன்னை தமிழீழப் பெண்ணினத்தின் எழுச்சிவடிவம். தான் பெற்ற குழந்தைகளுக்கு மட்டும் தாயாக விளங்காது தமிழீழம் முழுமைக்குமே தாயாய் நிறைந்திருப்பவர்" இவ்வாறு அன்னை பூபதியின் 4 ஆம் ஆண்டு நினைவாக விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் விபரம் வருமாறு:

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டமானது மீண்டுமொரு வியக்கத்தக்க தியாகத்தினை உள்வாங்கிக் கொண்டது. எமது போராட்டம் நீண்ட பெரும் தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களையும் தன்னகத்தே கொண்டது. இந்த அர்ப்பணிப்புகள் தியாகங்களினுள் அன்னை பூபதி அவர்களின் தியாகம் வித்தியாசமானது. போற்றுதலுக்குரியது.

ஒரு வல்லரசை எதிர்த்து தாயாக, ஒரு சாதாரண குடும்

(8ஆம் பக்கம் பார்க்க)

## இன்று காலை ஒலி பரப்பு

அன்னை பூபதியின் நினைவு நாளையொட்டி தலைவர் பிரபாகரன் விடுத்துள்ள செய்திகள் இன்று காலை 8 மணிக்கும் பின் மாலை 8-15 மணிக்கும் தமிழீழ வானொலியிலும் புலிகளின் குரலிலும் ஒலிபரப்பாகும்.

## அன்னை பூபதி

# பொது அறிவுப் போட்டி பரீட்சை முடிவுகள்

அன்னை பூபதி நினைவு பொது அறிவுத் தேர்வு 1992 ஆண்டிற்கான முடிவுகள் இங்கு தரப்படுகின்றன. எல்லா மாவட்டங்களிலும் நிகழ்ந்த பரீட்சையில் உயர் 'அ' தரத்தில் திறமைச் சித்தியடைந்த மாணவர்களின் விபரங்கள் பின்வருமாறு:

**யாழ் மாவட்டம்:-**

2812 மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள். 'அ' பிரிவில் 186 மாணவர்களும் 'ஆ' பிரிவில் 497 மாணவர்களும்

(3 ஆம் பக்கம் பார்க்க)



# தியாகச் சுடர்
# அன்னை பூபதியின்
## நான்காம் ஆண்டு ஞாபகார்த்த தினம்

இந்திய ஆக்கிரமிப்பை உலகறியவைத்து
எம்மக்களை காக்க எழுந்த ஒரு சுடர்.
தமிழீழம் எங்கும் பல தீபங்களை ஏற்றிவைத்து
தன்னை அழித்துக் கொண்ட இந்நாளில்
அன்னை ஏற்றிய தீபங்கள் அணையாது காப்பதே
நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.

காந்திய நாட்டின்
காட்டு மிராண்டிகள்
ஏந்திய கருவிகளை
ஏளனம் செய்தபடி
செந்தமிழ் மணக்கும்
மாமாங்க மண்ணில்
கந்தகக் காற்றென
அன்னை எழுந்தாள்

தந்தையர் மண்ணிது - எம்
தனயரே காப்பர்
வந்த வழி நீ போய்விடு
வாதைகள் செய்யாமல் - என
அந்நிய இராணுவ
அரக்கனை அசைத்து
முந்தியே மொழிந்தவள்
தன் பெரும் செயலால்


**மனோகரன் அன்ட் வெற்றிவேல்**
49, அம்பலவாணர் வீதி,
யாழ்ப்பாணம்

**ஸ்ரீ முருகன் தச்சுத் தொழிற்சாலை**
76, ஏ. அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

**கே. ஏ. இன்ஜினியர்ஸ்**
142, பலாலி வீதி,
திருநெல்வேலி.

**ஜோன் வூட் வேர்க்ஸ் இன்டஸ்ரீஸ்**
152, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

**வடமாகாண அரசாங்கஒப்பந்தகாரர் சங்கம்**
15, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம், (ஓ-4286)

**என். ஸி. ஸி. எல்.**
15, வெள்ளான் தெரு,
யாழ்ப்பாணம்.

**கிருஸ்ணாஸ்**
பருத்தித்துறை வீதி,
இருபாலை.

**வினாயகர் இன்ஜினியறிங்**
கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில்.

**குளோபல் இன்ஜினியரிங் ரெக்னோலோஜி சேவிர்சஸ்**
32, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.


இணுவில் — மஞ்சத்தடி
## அருள்மிகு அருணகிரிநாதர் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்

## அறிவித்தல்

இன்று 19.4.1992 ஞாயிற்றுக்கிழமை, இந்த மண்ணுக்குத் தன்னை ஈந்தவரும், இந்தியப்படைகளின் அராஜகச் செயல்களை உலகுக்கு உணர்த்திய காந்தியம் தந்த இந்தியாவுக்கே அகிம்சையை வெளிப்

## நினைவுகூருகின்றோம்...
## 1992-04-19

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை, அக்கரைப்பற்றுப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -
லெப். வன்னி (வேலுப்பிள்ளை வன்னியசிங்கம் -

## மீள் பரிசீலனை விண்ணப்பம்

(கொழும்பு)

க. பொ. த. சாதாரணப் பரீட்சை முடிவுகளை மீள்பரிசீலனை செய்ய விரும்புவோர் விண்ணப்பங்களை அனுப்பலாம் எனக் கோரப்பட்டுள்

## சுவாமி கோயில்

### விசேட தெய்வீக இசை நிகழ்ச்சிகள்

**19.04.92 ஞாயிற்றுக்கிழமை இரவு 7.00 மணிக்கு**

திரு. V. சிவஞானசேகரம் — பாட்டு
திரு. S. கோபிதாஸ் — வயலின்
திரு. M. வேல்மாறன் — மிருதங்கம்
திரு. S. துரைராஜா — கெஞ்சிரா

**20. 4. 92 திங்கட்கிழமை**

மாலை 7 மணிக்கு திரு L. திலகநாயகம் போல்பாட்டு
திரு. R. ராதாகிருஷ்ணன் வயலின்
திரு. K. கண்ணதாசன் மிருதங்கம்
திரு. சதா. வேல்மாறன் கெஞ்சிரா

**21. 4. 92 செவ்வாய்க்கிழமை**

7 மணிக்கு விவேகானந்த கிராம முன்னேற்றச்சங்க மாணவ மாணவிகள் வயலின் கச்சேரி

1. செல்வி T. குகரஞ்சனி அவர்கள்
செல்வி கௌரி வைத்தீஸ்வரன் அவர்கள்
2. சிறுவர்களுடைய மிருதங்க நிகழ்ச்சி
ராதாகிருஷ்ணன் ரகுவன்
சுந்தரமூர்த்தி கிருபாமூர்த்தி
சி லிங்கம் சிவகஜன்

**22, 4. 92 புதன்கிழமை**

7. மணிக்கு சோலோ
திரு R. ராதாகிருஷ்ணன் } வயலின்
திரு. S. கோபிதாஸ் }
திரு. K. கண்ணதாசன் மிருதங்கம்
திரு. S. நாகராஜன் கெஞ்சிரா
திரு. S. ராயு முகர்சிங்

**23. 4. 92 வியாழக்கிழமை வேட்டைத் திருவிழா**

வேட்டைக்கு புறப்படல் மாலை 3. 30

மாலை 8. 00 மணி நாகம்மா கதிர்காமர் பாட்டு
திரு. R. S. கேசவமூர்த்தி வயலின்
திரு. S சின்னராசா மிருதங்கம்
திரு சதா. வேல்மாறன் கெஞ்சிரா

**24. 4. 92 வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழா**

காலை வசந்த மண்டப பூஜை 8 மணிக்கு

மாலை 7. 00 மணி செல்வி கனகாம்பரி
பத்மநாதன் — பாட்டு
திரு. S. கோபிதாஸ் — வயலின்
திரு. K. கண்ணதாசன் — மிருதங்கம்
திரு. S. நாகராஜன் — கெஞ்சிரா

**25. 4. 92 சனிக்கிழமை தீர்த்தத்திருவிழா**

காலை 9. 00 மணிக்கு

மாலை 7. 00 மணி பிரம்மஸ்ரீ ராமநாதன் ஐயர் — பாட்டு
திரு. S. கோபிதாஸ்— வயலின்
திரு S. மகேந்திரன்— மிருதங்கம்
திரு S. துரைராஜா— கெஞ்சிரா

**26. 4. 92 ஞாயிற்றுக்கிழமை திருக்கல்யாணம்**

மாலை 5. 00 மணி

8: 00 மணி திரு. S. பத்மலிங்கம் — பாட்டு
திரு. R. ராதாகிருஷ்ணன்— வயலின்
திரு. M. சிதம்பரநாதன் — மிருதங்கம்
(சி-4287) திரு. S. நாகராஜன் — கெஞ்சிரா

---

மண்ணுக்குத் தன்னை ஈந்தவரும், இந்தியப்படைகளின் அராஜகச் செயல்களை உலகுக்கு உணர்த்திய காந்தீயம் தந்த இந்தியாவுக்கே அகிம்சையை வெளிப்படுத்தியவருமான தியாகி அன்னை பூபதியின் நினைவுக் கூட்டங்களில் மாணவர்கள் கலந்து கொள்வதற்காக புதிய உயர் கல்லூரி இன்று மூடப்பட்டு இருக்கும் பதை மாணவர்களுக்கு அறியத் தருகின்றோம்.

- இயக்குநர்

**புதிய உயர் கல்லூரி**
**ஆரியகுளம் சந்தி**
**யாழ்ப்பாணம்**

(சி/4284)

---

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



### செல்வன் கஜந்தன்

சண்டிலிப்பாய் வடக்கில் வசிக்கும் இரத்தினசிங்கம் இந்திராணி தம்பதிகளின் செல்வ புதல்வன் ''கஜந்தன்'' இன்று தனது முதலாவது பிறந்த தினத்தை குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, தாத்தா, மாமாமார், அன்ரிமார், மச்சான்மார், மச்சான்மார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அனைவரும் பல்லாண்டு காலம் நீடூழி வாழ அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.

சண்டிலிப்பாய் வடக்கு
சண்டிலிப்பாய்

(2481)

---

அக்கரைப்பற்றுப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**லெப் வன்னி** (வேலுப்பிள்ளை வன்னியசிங்கம் - வம்மியடி ஒழுங்கை, தம்பிலுவில் -1, அம்பாறை )

1988 ஆம் ஆண்டு அம்பாறை, அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**அரசன்** (தங்கராசா கிருஸ்ணபிள்ளை - காரைதீவு. அம்பாறை )

மட்டக்களப்பு பாவற்கொடிச்சேனையில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதிகளால் கைதுசெய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட -

**லூக்காஸ்** (மாணிக்கப்போடி கணபதிப்பிள்ளை - முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு.)

செட்டிபாளையத்தில் இந்தியப்படையினர், மற்றும் தேசவிரோத சக்திகளினால் கைது செய்யப்பட்டு சம்மட்டியால் அடித்துக் கொலை செய்யப்பட்ட -

**2-ம்லெப், கலா** (பொன்னம்பலம் சதானந்தரத்தினம் -ஆரையம்பதி - 3 மட்டக்களப்பு.)

இந்திய ஆக்கிரமிப்புப் படைக்கு எதிராக - இந்திய அரசிற்கு இரண்டு நிபந்தனைகளை முன்வைத்து, மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் - தமிழீழ மக்களின் விடிவிற்காக சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டு ஈகச்சாவெய்திய -

**அன்னை பூபதி** (பூபதி கணபதிப்பிள்ளை - கிரான், மட்டக்களப்பு.)

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா ராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**ஆதவன்** (பாலகிருஸ்ணன் மோகனராஜ் - இரணைமடுச்சந்தி, கிளிநொச்சி.)

விமன்காமம் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எம்மைப் பிரிந்த -

**தங்கச்சி** (முருகையா நிமலகாந்தன் - தெல்லிப்பளை.)

மன்னார் பரப்புக்கடந்தான் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**லெப். கேணல் கிறேசி** (கணபதிப்பிள்ளை கோபாலபிள்ளை - வட்டக்கச்சி, கிளிநொச்சி )

**லெப். வாசு** (துரைராசா துருபதராஜ் - நெல்லியடி.)

**2-ம் லெப். தென்னவன்** (வைத்திலிங்கம் விக்கினேஸ்வரன் - மயிலியதனை, தொண்டமனாறு )

**2- ம் லெப். சீக்கோ** (திருஞானசம்பந்தர் பரமேஸ்வரன் - பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.)

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்**

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/4283)

---

விண்ணப்பங்களை அனுப்பலாம் எனக் கோரப்பட்டுள்ளது. கடந்த டிசம்பரில் நடைபெற்ற க.பொ.த (சாதாரண தர பரீட்சை முடிவுகளை மீள்பரிசீலனை செய்ய விரும்புவோர் மே மாதம் பத்தாம் திகதிக்கு முன்பாக தமது விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் எனக் கல்வி அமைச்சின் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

## இல.தொ.கா மே தினம்

இம்முறை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மேதினவிழா கொட்டகலை விளையாட்டரங்கில் நடைபெறஉள்ளது.

பிரதம அதிதியாக உல்லாச பிரயாண கைத்தொழில் துறை அமைச்சர் எஸ்.தொண்டமான் கலந்து கொள்ளும் மேற்படி விழாவில்தென்னிந்தியக் கலைஞர்களும் பங்குபற்ற உள்ளனர்.

## கடையுடைத்து திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் புத்தாண்டு தினத்தன்று பல கடைகள் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

சாவகச்சேரி கண்டி வீதியிலுள்ள பூந்தென்றல் என்ற ஸ்தாபனத்தில் இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான பால்மா, பிஸ்கட் வகைகள் திருடப்பட்டுள்ளன. இக்கடையில் இரு வாரங்களுக்கு முன்பும் இவ்வாறு திருட்டுப் போயுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யூனியன் பேக்கரிக்கு அருகேயுள்ள கடையிலும் புத்தாண்டு தினத்தன்று பதினையாயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இதைவிட மீசாலை, நுணாவில் பகுதிகளில் உள்ள கடைகளிலும் பொருட்கள் திருடப்பட்டுள்ளன. (35)

## சிந்தனைக்கு

நாடுகள் பெருந்தன்மை எய்தும்வரை, விவேகம் எய்த இயலாது.

— வாஷிங்டன் இர்விங்


ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 19-04-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05


# உந்து சக்தியான அன்னை பூபதி

அன்னை பூபதி தமிழீழ மண்ணிற்காகவும், மக்களுக்காகவும் தன் இன்னுயிரை ஈந்த நாள் இன்றாகும். நான்கு வருடங்களுக்கு முன்னர் தமிழ் மக்கள் மீது இந்திய இராணுவம் மேற் கொண்ட யுத்தத்தை உடன் நிறுத்த வேண்டும், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற இரு கோரிக்கைகளை முன் வைத்து சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து தான் கொண்ட இலட்சியத்திற்காக இன்னுயிர் ஈந்தவர் அன்னை பூபதி கணபதிப்பிள்ளையாகும்.

காந்தியமே எமது தத்துவம், அகிம்சையே எமது அணுகுமுறை எனத் தினமும் பறை சாற்றி வரும் இந்திய அரசாங்கத்தையும், அதன் ஆட்சியாளரையும் மீண்டும் ஒருமுறை அன்னை பூபதி அம்பலப்படுத்தினார். காந்தியின் புதைகுழியினுள்ளேயே காந்தியின் கொள்கைகளையும் இந்திய ஆட்சியாளர்கள் புதைத்து விட்டார்கள் என்பதை உலகிற்கு தெளிவாக வெளிக்காட்டியவர் அன்னை பூபதியாகும்.

தியாகி திலீபன் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த போது இந்தியா நடந்து கொண்ட முறை அகிம்சைப் போராட்டத்தை ராஜீவ் அரசாங்கம் எவ்வாறு அணுகும் என்பதை இலங்கைத் தமிழ் மக்களுக்கு உணர்த்தியதென்றால், அன்னை பூபதியின் போராட்டம், இலங்கைத் தமிழருக்கு எதிராக எந்தளவிற்கு செல்லும் என்பதை வெளிக்காட்டிய இந்தியாதெனலாம்.

இதேவேளை அன்னை பூபதியின் போராட்டம் தமிழீழ மண்ணில் உருவாக்கிய வீரமிகு புதல்வர்களின் தாய்மார்களின் உணர்வுகளை உலகிற்கு வெளிக்காட்டிய போராட்டமாகும். அதாவது தமிழீழ மண்ணின் சுதந்திர வேட்கையை பறை சாற்றிய போராட்டமாகும். அத்தோடு தமிழீழ பெண்களின் பெருமையையும் விளங்க வைத்த போராட்டமாகும்.

தன்னைப் பற்றியும், தன் குடும்பத்தைப் பற்றியும் டலர் சிந்தித்த வேளையில், அன்னை பூபதி சாதாரண வாழ்க்கையைத் துறந்து தனது உறவுகளைத் துறந்து தமிழரின் நலம், சுதந்திரம், பாதுகாப்பு என்பன பற்றிச் சிந்தித்தார். இவற்றை மனதிற் கொண்டே தன்னுயிர் ஈய முன் வந்தார். ஆனால், அன்னை பூபதியின் போராட்டத்தால் இந்தியா வெட்கித் தலை குனிய வேண்டிய நிலை வரும் என்ற போது போராட்டத்தை தடுத்துவிட அல்லது குழப்பி விட இந்திய இராணுவத்தினர் முயன்றனர். ஆனால், அன்னை பூபதி தான் கொண்ட இலட்சியத்தில் இருந்து விலக

## பொது அறிவுப்

'இ' பிரிவில் 2129 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர். உயர் 'ஆ' பிரிவில் திறமைச் சித்தியடைந்த கீழ்வரும் மாணவர்களுக்கு விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் சான்றிதழ்களோடு பரிசில்களையும் வழங்க உள்ளது. சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் அவ்வப் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படும் என்பது தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆண்டு - 7**

ஆ 85108, கனகரத்தினம்- மதன் யா. கைதடி விக்கினேஸ்வரா வித்தி. அ 82718, கணேசலிங்கம்- மயூரன் யா. வசாவிளான் மகாவித்தியாலயம் ஆ 84626' மகேந்திரசிங்கம்- ஜெயசுந்தரி யா. நெல்லியடி மகளிர் கல்லூரி அ 81673, தில்லைநாதன் - ஜெகநாதன் யா. இந்துக் கல்லூரி அ 81610 பத்மநாதன் - சுஜிதா யா. வேம்படி மகளிர் கல்லூரி அ 81742, நடராசா - நிமலராசா யா. இந்துக் கல்லூரி.

**ஆண்டு -8**

ஆ 85294, இராசதுரை - ஞானராஜ் யா. சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆ 81705 பரராஜசேகரம் - கிருஸ்ணகோபி யா. வேம்படி மகளிர் கல்லூரி ஆ 81725, திருநாவுக்கரசு - பாலமுருகன் யா. பரியோவான் கல்லூரி.

**ஆண்டு - 9**

இ 82440 இராசலிங்கம்- பிரசாந்தன் யா. ஏழாலை மகாவித்தியாலயம் இ 83370 கெங்காதரன்-இந்திரமோகன் யா. தெல்லிப்பளை யூனியன் கல்லூரி இ 84543 ஜெயவீரசிங்கம் - ஜெயந்தி யா. புற்றளை மகாவித்தியாலயம் இ 82319 தே. சேந்திரபாலன் யா. ஸ்கந்தரோதயாக் கல்லூரி இ 81656 சோமசுந்தரம் ராஜ்தணிகைச்செல்வன் யா. இந்துக்கல்லூரி இ 81655 துரைராசா - பிரஷாந்தன் யா இந்துக்கல்லூரி.

**ஆண்டு - 10**

ஈ 86126 அகிபேட் - பெலிசியா யா. ஊர்காவற்துறை புனித மரியாள் பாட ஈ 82625 தர்மலிங்கம் - ஜெயமாலா யா நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஈ 82271, பாலசுப்பிரமணியம் - ரமேஸ்கண்ணா யா. இணுவில் சைவ மகாஜனா ம வி ஈ 81754 செல்வநாயகம் - சக்தீபன் யா. இந்துக்கல்லூரி.

**ஆண்டு - 11**

உ 81900, தர்மராஜன் - விநோதன் யா. இந்துக்கல்லூரி உ 8363 நா. நகுலேஸ்வரன் யா. இளவாலை மெய்கண்டான் ம. வி உ 85186, சின்னத்தம்பி-செந்தில்குமரன் யா. சாவகச்சேரி இந்துக்கல்லூரி உ 84166, சிவப்பிரகாசம்- விஜயபாலன் யா. ஹாட்

கனகாம்பிகைக்குளம் கனிஸ்ட வித்தி.

**ஆண்டு 8**

ஆ 64100 ஜனார்த்தன ராஜன் - ஜனார்த்தனனி கிளி. புனித திரேசா மகளிர் வித்தி, ஆ 64137 குலசேகரம்- ஜெயாகரன் கிளி. திருவையாறு அ. த. க. பா.

**ஆண்டு 9**

இ 6181 குமாரசாமி - ரமணன் கிளி. கண்டாவளை மகா வித்தியாலயம்,

**ஆண்டு 11**

உ 6450 இராஜகோபால் - உதயகுமார் கிளி. கனிஸ்ட வித்தியாலயம்,

**ஆண்டு 12 - 13**

ஊ 6824 பா. லோகேஸ்வரன் கிளி. மல்லாவி மகாவித்தியாலயம், ஊ64152இராசேந்திரம் உமாநிதி கிளி புனித திரேசா மகளிர் வித்தி.

**வவுனியா மாவட்டம்:-**

181 மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள். 'அ' பிரிவில் 34 மாணவர்களும், 'ஆ' பிரிவில் 66 மாணவர்களும், 'இ' பிரிவில் 81 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர். உயர் 'ஆ' பிரிவில் சித்தியடைந்த கீழ்வரும் மாணவர்களுக்கு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் சான்றிதழ்களோடு பரிசில்களையும் வழங்க உள்ளது, ஏனைய பிரிவுகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் அவ்வப்பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

**ஆண்டு 7**

அ 52284 வே. விஜயராணி வ. புளியங்குளம், 54136 ஜே. றினோஜா வ. பெரியதம்பனை அ 55009 ப. அருள்வாணி வ. கணேஸ்வரா

**ஆண்டு 8**

ஆ. 56037 த. ஜெயக்குமார் வ.செட்டிகுளம் ம.வி

**ஆண்டு 9**

இ 51371 ந. கவிதா வ. சேமமடுஇ(1)52325 தா. தினோகரன் வ. புளியங்குளம் 53274 கோ. சசிக்குமார் வ.நெரச்சிமோட்டை 55038 ப. கலைவாணி வ கணேஸ்வரா 55039 ப.கலையரசி வ. கணேஸ்வரா

**ஆண்டு 11**

உ 51210 சு. தவமலர், வ. ஓமாந்தை ம. வி. உ52206 சி. சுந்தரமூர்த்தி, வ. கனகராயன் குளம். உ 52205 ச. தயாபரன், வ. கனகராயன்குளம். உ52207 வி. தயாளன், வ.கனகராயன்குளம். உ 52208 ஜெ ஸ்ரீரெங்கநாதன் வ. னகராயன்குளம்.

**ஆண்டு - 12 13**

ஊ 52229 த. சுகந்தன் வ. கனகராயன் குளம் ஊ 52245 சி. சிவாஜினி வ. கன

# தியாகச் சுடர் அன்னை பூபதி

(நேற்றைய தொடர்ச்சி)

எங்கும் கறுப்புக் கொடிகளும் வெள்ளைக்கொடிகளும் தெருக்கள் ஒழுங்கைகள் எல்லாம் வாழை மரங்கள் நட்டு துக்கம் வெளிப் படுத்தப்படுகிறது. முக்கிய சந்திகள் தோறும் அன்னை பூபதியின் மறைவு இரங்கல் பதாகைகள் தொங்கவிடப்படுகின்றன.

தத்தம் அலுவல்களை அப்படி அப்படியே விட்டவாறு ஊழியர்களும் கடைக்காரர்களும் அன்னைக்கு அஞ்சலி செய்ய திரள்கின்றார்கள். வகுப்பறைகளில் புத்தகங்களை விட்டுவிட்டு அன்னையைக் காண ஓடிவந்த மாணவர்களும் மாணவியர்களும் அங்கு சிலையாகினர். சமையல் தட்டில் மரக்கறியும் கையுமாக நின்ற அன்னையர்களும் அப்படித்தான்.

அன்னையர் முன்னணியின் கையே ஓங்கியது முகத்துவாரம் வீதியிலுள்ள மட்டக்களப்பு அன்னையர் முன்னணியின் அலுவலகத்துக்குஅன்னையின் பூதவுடல் கொண்டு வந்து வைக்கப்பட்டு அடுத்துள்ள விளையாட்டுத் திடலில் நிறுவப்பட்ட விசேட பந்தலில் அவ்வுடல் பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இந்தியப் படையினரின் கழுகுப்பார்வைக்கும் அகப்படாது புலிகள் எப்படியோ மலர் வளையம் ஒன்றை கொண்டு வந்து அன்னையின் புனித பாதத்தில் அர்ப்பணித்திருந்தனர்.

''நியாயம் தேடித்தான் என் மனைவி உயிர்விட்டார்''

கணபதிப்பிள்ளை கங்காணியாரின் அச்சொட்டான பதிலிது அமைதிப்படையினருக்கு.

அன்னையர் முன்னணி உறுப்பினர்களும் உறவினர்களும் பொதுமக்களும் அன்னையின் உடலைச் சூழ்ந்து பாதுகாத்துக் கொண்டதால்பிரேதத்தை அப்புறப்படுத்தி சூட்டோடு சூடாக அழித்து விடும் இந்தியப் படையினரின் முயற்சிகள் முறியடிக்கப்பட்டன.

படையினர் தலையைத் தொங்க போட்டபடி முகாம் திரும்பினர்.

அதில் இந்த வாசகம் உள்ளது

''விடுதலைக்கு தன்னுயிர் நீத்த எங்கள் அன்னைக்கு வீரவணக்கம்''

பாம்பின்கால் பாம்பறியும் வீரியத்தை வீரனே மெச்சுவானல்லவா?

பல பாகங்களில் இருந்தும் ஏராளமான இரங்கற் பிரசுரங்கள் பல்வேறு சமய, பொது கல்வி ஸ்தாபனங்களால் வெளியிடப்பட்ட வண்ணம் இருந்தன. மும்மத குருமார்கள் அன்னை அருகில் வந்து பிரார்த்தனை செய்கின்றனர். கவிதாஞ்சலியும் சமர்ப்பிக்கப்பட்டது.

ஒரு சமான்யப் பெண்ணின் மறைவுக்கு இத்தனை மரியாதையா? இந்தியப் படையினரும், கைக் கூலிகளும் நெஞ்சம் பொருமினர். மீண்டும் அன்னையின் பூதவுடலைக் கொண்டு செல்லும் ஒரு உபாயத்தில் ஈடுபட்டு அன்னையர் முன்னணியின் எதிர்ப்பால் தோல்வி கண்டனர். (முற்றும்

## பெரும் படையெடுப்பால்

[முன்பக்கத் தொடர்ச்சி]

# தமிழ் மக்களுக்கு நீதி வழங்க சிங்கள இனவாதம் தயாரில்லை

எனினும் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு சிங்களப் பேரினவாதிகள் தயாராக இல்லை. மனித தர்மத்தின் அடிப்படையில் தமிழருக்கு நீதியும் நியாயமும் வழங்கச் சிங்கள தேசம் தயாராக இல்லை. ஆயுத பலம் மூலம் இராணுவ மேலாதிக்கத்தைநிலைநாட்ட வேண்டும்; தமிழினத்தைத் துப்பாக்கி முனையில் பணிய வைக்க வேண்டும்: தமிழரின் தாய் மண்ணை பலவந்தமாக பறித்தெடுக்கவேண்டும்; என்ற பழைய அடக்குமுறைப் பாதையைச் சிங்கள ஆளும் வர்க்கம் கைவிட்டதாகத் தெரியவில்லை.

தமிழரின் பிரச்சினை குறித்து சிங்கள அரசியல் உலகில் எவ்வித அடிப்படையான மன மாற்றமும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. இரத்தமும் கண்ணீரும் தோய்ந்த ஒரு நீண்ட முடிவில்லாத சோக வரலாற்றைத் தழுவி நிற்கும் எமது மக்களின் துயரநிலை பற்றி சிங்கள இனவாதிகள் கவலை கொண்டதாகத் தெரியவில்லை. முப்பதினாயிரம், அப்பாவித் தமிழரின் பிணக்குவியல்கள்மீதுமேடையமைத்து சிங்களப் பேரினவாதம் மிகவும் அதர்மமான அநாகரிகமான அரசியலை நடத்திவருகிறது.

# இரட்டைவேட அணுகுமுறையை புலிகள் இயக்கம் ஏற்காது

ஒருபுறம் யுத்தத்தை தீவிரப்படுத்திக் கொண்டு, மறுபுறம் சமாதானப் பேச்சுக்களை நடத்தி, புலிகள்மீது நெருக்குதல் போட்டு ஒரு தீர்வைத் திணித்துவிடலாமென சிங்கள அரசு எண்ணுகிறது. போரும் பேச்சும் என்ற இந்த இரட்டை வேட அணுகுமுறையை எமது விடுதலை இயக்கம் ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ளப் போவ

திற்கு விரோதிகள் அல்லர். ஆனால் சமாதான அணுகுமுறை என்பது எமது மக்களின் உரிமைகளையும், நலன்களையும் விட்டுக்கொடுக்கும் விவகாரம் அல்ல. எனினும் எமது மக்களின் உரிமையை வென்றெடுக்க முடியுமானால், எமது மக்களின் நலன்களைப் பேணிப்பாதுகாக்க முடியுமானால்,சமாதானவழிமுறையை

கடியான வரலாற்றுத் திருப்புமுனையைச் சந்தித்து நிற்கிறோம். எதிரி எம்மீது படைகொண்டு தாக்கலாம். புதிய ஆக்கிரமிப்பு யுத்தத்தைத் தொடரலாம். எது நிகழ்ந்தாலும், எதற்கும் அஞ்சாத துணிவும் உறுதியும் எம்மிடமுள்ளவரை எந்தசக்தியாலும் எம்மைவென்றுவிட முடியாது

விளைவு இந்தியாவின் வல்லாதிக்கத்தின் வேஷம முழுமையாகக் கலைக்கப்பட்டது. இந்தியர்கள் தமிழரை இரட்சிக்க வந்தவர்கள் மாயை முற்றாக மறைந்தது. அத்தோடு, இலங்கைத் தமிழரை தனது வல்லாதிக்கத்திற்காக பலியிட இந்தியா முழுமையாகத் தயாராகி விட்டது என்பதை தெளிவாக உணர்த்தியது.

இதேவேளை, தமிழரின் தேசிய இனப் போராட்டத்திற்கு ஒரு உந்து சத்தியாக அன்னை பூபதியின் போராட்டம் அமைந்தது. தமிழீழ மக்களை சுதந்திரப் போருக்கு எழுச்சி கொள்ள வைத்தது அந்நிய இராணுவத்தை நாட்டை விட்டு வெளியேற்ற உதவியது. தற்பொழுதும் எதிரியின் முன் நின்று போராட தன் நம்பிக்கையை ஊட்டியது.

## பாப்பரசர் சிலுவை சுமந்தார்

(ரோம்)

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் மரத்தினாலான சிலுவையைச் சுமந்தவாறுகிறிஸ்துநாதர் சிலுவையில் அறையப்பட்டமையினை நினைவு கூரும் ஊர்வலத்தில் கலந்துகொண்டார். பண்டைய உரோமாபுரியின் சிதைந்து போன பகுதிகளின் ஊடாக இந்த ஊர்வலம் நேற்று முன்தினம் நடைபெற்றது ஆயிரக்கணக்கான விசுவாசிகள் கடுங்குளிரையும் பொருட்படுத்தாமல் மெழுகுதிரிகளை ஏந்தியவாறு இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

இதற்கு முன்பாக வத்திக்கான் நகரிலுள்ள சென்பீட்டர்ஸ் தேவாலயத்தில் நடைபெற்ற ஆராதனையில் உலக சமாதானம் வேண்டிய பிரார்த்தனைக்கு பாப்பரசர் தலைமைதாங்கினார்.

## பாதுகாப்பான இடத்திற்கு லிபிய தூதுவர் மாற்றம்

(டில்லி)

இந்தியாவுக்கான லிபியாத் தூதுவர் புதுடில்லியிலுள்ள அவரது தூதரகத்திலிருந்து பாதுகாப்பான இடத்துக்கு மாற்றப் பட்டுள்ளார்.

அவர் தமது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்று பாதுகாப்பு கோரியதன் காரணமாகவே அவரும் அவரது குடும்பமும் பாதுகாப்பான ஓர் இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. ஆனால், தூதுவர் அரசியல் தஞ்சம்கோரவில்லை என்று இந்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அவரும், குடும்பமும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்குமிடம் தெரிவிக்கப்படவில்லை

### ஆண்டு 12 - 13

ஊ 83391, சொக்கலிங்கம் தனஞ்செயன் யா யாழ்இந்துக் கல்லூரி ஊ 82179, சுப்பிரமணியம் - சரத்குமார் யா. மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை, ஊ. 82173, தம்பித்துரை - சந்திரகாந் யா. மானிப்பாய், மெமோறியல் ஆங்கில பாடசாலை 8479ஊ. செல்லத்தம்பி சுதாகரன் யா. ஹாட்லிக் கல்லூரி, ஊ. 8155, சந்திரலிங்கம் கெங்காதரன் யா. மத்திய கல்லூரி.

## கிளிநொச்சி மாவட்டம்

371 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். 'அ' 14 மாணவர்களும் 'ஆ' பிரிவில் 34 மாணவர்களும், 'இ' பிரிவில் 323 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர். உயர் 'அ' பிரிவில் சித்தியடைந்த கீழ் வரும் மாணவர்களுக்கு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் சான்றிதழ்களோடு, பரிசில்களையும் வழங்க உள்ளது. சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் அவ்வப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதும் தெரிவிக்கப்பட்டுள்ளது

### ஆண்டு 7

அ 6226 செ. வசந்தமலர் கிளி. முரசுமோட்டை முருகானந்தவித்தி. அ 6422சற்குருநாதன் - சுரேசன் கிளி. கிளி மத்திய மகாவித்தியாலயம், அ 61127 குக தாசன் - ஜெயதேவன் கிளி. தர்மபுரம் மகாவித்தியாலயம், அ 64130 ச. நவநீதகேசி கிளி. திருவையாறு அ. த. க பா, அ 64146 தியாகராசா - களகேசவன் கிளி.

274 மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள். 'அ' பிரிவில் 42 மாணவர்களும் 'ஆ' பிரிவில் 38 மாணவர்களும், 'இ' பிரிவில் 194 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர். உயர் 'அ' பிரிவில் திறமைச் சித்தியடைந்த கீழ்வரும் மாணவர்களுக்கு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் சான்றிதழ்களோடு பரிசில்களையும் வழங்க உள்ளது. ஏனைய பிரிவுகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் அவ்வப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதும் தெரிவிக்கப்படுள்ளது.

### ஆண்டு - 7

அ 46001 நடராசா - சிவப்பிரதீபன் மன். இலக்கடிப்பிட்டி றோ.க அ 45007 யோ. ஜேக்கப்நெவின்ஸ் மன். பண்டிவிரிச்சான் அ. த. க. பா

### ஆண்டு - 8

அ 430028 உ. அச்சுதநாத் மன். இலுப்பைக்கடவை அ. த. க. பா

### ஆண்டு - 9

இ 420032 பவுனினப்பர் - மேரிறொக்சி கிளி. வேரவில் இந்து. தமிழ்க்கலவன் பா.

### ஆண்டு - 10

ஈ 49005 செ அன்ரன்யூட் செல்வநாதி மடு. திறந்த நிவாரண பாடசாலை

### ஆண்டு - 11

உ 440052 வேலு-இந்திரகலாமன். கருங்கண்டல் றோ. க

### ஆண்டு - 12.13

ஊ 470025 அம்புறாஸ்-ஜோன் பொஸ்கோ மன். முருங்கன் ம வி ஊ 47003 மரியாம்பிள்ளை - கோமனா கொலஸ்ரிக்கா மன். முருங்கன் ம வி

பதை தெட்டத் தெளிவாக எடுத்துக்கூற விரும்புகிறேன். நாம் சமரிதான மாரிக்கத்

வேண்டும்.

இன்று நாம் மிகவும் நெருக்

அவர்களுக்கு வீ ர வ ண க்கம் சொலுத்துவோமாக.

## யுத்தவிமானங்கள் நோட்டம் கிலிகொண்ட மக்கள் ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

நீண்டநாள் இடைவெளியின் பின்னர் நேற்று யாழ் நகரப் பகுதி மற்றும் நகரை அண்டிய பகுதிகளின் வான் பிராந்தியத்தில் குண்டு வீச்சு விமானங்கள் பலதடைவகள் வட்டமிட்டன.

மாலை 7.00 மணியளவில் சிறிலங்கா விமானப் படையினரின் இரு குண்டுவீச்சு விமானங்கள் பலத்த இரைச்சலுடன் வட்டமிட்டுப் பறந்து திரிந்தன. இதனால் கிலிகொண்ட மக்கள் பாதுகாப்பான இடங்களை நாடி ஓடினர். எனினும் குண்டுவீச்சு எதுவும் நடாத்தப்படவில்லை.

(க)

## 245 வெற்றிடங்கள்

(யாழ்ப்பாணம்)

வடகிழக்கு மாகாணத்தில் எழுதுவினைஞர் பதவிக்கு 245 வெற்றிடங்கள் உள்ளன. இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கொழும்பு நிர்வாக சபையுடன் தொடர்பு கொண்டு யாழ் அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

## பிக்குகள் பயணத்தில் கருத்து முரண்பாடு

புத்தபிக்குகளின் யாழ்ப்பாணவிஜயம் குறித்து கொழும்பிலும், தென் பகுதியிலும் கருத்துவேறுபாடுகள் தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா அரசும், எதிர்க்கட்சிகளும் இந்தப் புத்தபிக்குகளின் யாழ்ப்பாணவிஜயத்தை ஆதரிப்பதாகக் கொழும்புச் செய்திகள்கூறுகின்றன. புத்தபிக்குகளில் மற்றொரு சாராரும், தமிழ்க்குழுக்களும் இந்த விஜயத்தை எதிர்ப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ். வர தெரிவுக்குழு அக்கறை காட்டுகிறதாம்

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு காண்பதற்கென நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டபடி இம்மாதம் இருபத்தோராம், இருபத்து மூன்றாம் திகதிகளில் கூட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கூட்டம் அடுத்தமாதம் முதற்பகுதியில் நடைபெறலாம் எனத் தெரியவருகிறது.

இதேவேளை விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வதாக இந்தியா அறிவிக்கும் முன்பாக யாழ்ப்பாணம் சென்று புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த பாராளுமன்றத் தெரிவுக் குழு அக்கறை கொண்டிருப்பதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து செய்திகள் வெளிவந்துள்ளது.

இதேவேளை தெரிவுக் குழுவின் தலைவரான எம். பி மங்கள முனசிங்க யாழ். வரவிருக்கும் பௌத்த பிக்குகளைச் சந்தித்து நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளதாக தெரியவருகிறது.

### தெரிவுக்குழுவின்

கொழும்பிலிருந்து புனித நகரமான அனுராதபுரத்திற்குத் தரை மார்க்கமாக வந்த குழு, அனுராதபுரத்தில் புனித அரசமரத்தடியில் ஆசிவேண்டி மத வழிபாடுகளை நடத்தி விட்டு அங்கிருந்து விமானப் படை விமானம்மூலம் பலாலி வந்தடைவர்.

# ஈழநாதம்

## நஜிபுல்லாவை ஒப்படைக்க தீவிரவாதிகள் கோரிக்கை

(காபுல்)

ஆப்கான் தலைநகர் காபுலை நெருங்கி வந்துள்ள முஜாஹிதீன் போராளிகளின் தலைவர் ஆப்கானிஸ்தானுள் வந்துள்ளதாக போராளிகள் தரப்புச் செய்திகள் கூறுகின்றன

நஜிபுல்லாவின் வெளியேற்றத்தைக் குறித்து அரசு அதிகாரத்தைச் சக்திவாய்ந்த முஜாஹிதீன் போராளிகளிடம் ஒப்படைப்பது குறித்து ஐ.நா. சபை கவனம் செலுத்த வேண்டும் என போராளிக் குழுக்களில் ஒன்றான ஜமியா குழு கேட்டுள்ளது.

இதேவேளை ஆப்கானிஸ்தானில் நிலைமை மோசமாகி வருவதையடுத்து அமைதியான முறையில் அதிகாரத்தை மாற்ற ஐ. நா. சபையுடன் தான் ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாக ஈராக் அறிவித்துள்ளது.

### விடுதலைப்புலிகள்

இந்தப் பிரச்சினை பின்னர் படிப்படியாக மேற்கொள்ளப்படும் என்றார்.

தமிழகத்தில் மாநில அரசு பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிப்பதாக செய்தியாளர் ஒருவர் பிரதமரிடம் குறிப்பிட்ட போது, நரசிம்மராவ் உடனிருந்த முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவிடம் இதுபற்றிக் கேட்ட போது, இந்தக் குற்றச்சாட்டு மிகமிஞ்சிய கற்பனை என்று பதிலளித்தார்.

### தடையையீறி

வழங்குவோம். இதற்காக எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கின்றோம். மத்திய அரசாங்கம் புலிகளைத் தடை செய்தால் நாம் அதை எதிர்த்து கிளர்ச்சி செய்வோம் வன்செயல்களில் நம்பிக்கை இல்லாத நாம் வன்செயல்களில் இறங்கினால் இந்திய இராணுவத்தினாலும் எம்மை அடக்க முடியாது என்பதை எச்சரிக்கையாக விடுகிறேன் எனவும் குறிப்பிட்டார்.

### வீரச்சாவு

விக்டர் டலீமா சிறுக்குளம் பரப்பாங்கண்டல் உயிலங்குளம், மன்னார்) ஆகிய இரு போராளிகள் வீரச்சாவை தழுவிக் கொண்டனர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## ஈழம் கோருபவர்களுடன் ஒத்துழைப்பது யார்?

**- சிறிலங்கா ஜனாதிபதி**

(கொழும்பு)

நாட்டை அழிப்பதற்காக ஈழம் கோருபவர்களுடன் யார் ஒத்துழைத்து வருகின்றார்கள் என்பதை மகரகம மற்றும் அம்பாறை குண்டு வெடிப்பு தொடர்பான விசாரணைகள் வெளிப்படுத்தும் என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்தார்.

புளத்சிங்கள தொகுதியில் இடம்பெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில்; துஷ்பிரயோக நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு அரசாங்கத்தில் இடமில்லை. எனவே தான் அவர்கள் அரசியலிருந்து வெளியேறினார்கள். தற்போது அரசாங்கத்திற்கு விரோதமான சக்திகளோடு சேர்ந்து கொண்டுள்ளார்கள் எனினும் அறிவில் உயர்ந்த இந்த நாட்டு மக்களை எவராலும் இலகுவில் ஏமாற்றிவிட முடியாது எனத் தெரிவித்தார்.

### புலிகள்

இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். 15 நிமிட நேரம் புலிகளால் நடாத்தப்பட்ட கடும் தாக்குதல்களால் இராணுவத்தினர் முகாமிற்குள் திரும்பிச் சென்றுவிட்டனர்.

இத் தாக்குதல்களின் போது விடுதலைப் புலிகளின் மகளிர் படைப் பிரிவினரும் இணைந்து வெற்றிகரமான இத்தாக்குதலை மேற்கொண்டனர்.

இம் மோதல்களின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் இரண்டு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

### உலகப்பெண்

பப் பெண்ணாக, தனி மனுசியாக அன்னை பூபதி பாரிய அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் ஆரம்பித்த உண்ணா விரதப் போராட்டமானது இந்தியாவை உலக அரங்கில தலைகுனிய வைத்தது. அவர்களுடைய வேஷத்தை அம்பலப்படுத்தியது. தூங்கிக் கிடந்த தமிழீழ மக்களைத் தட்டி எழுப்பியது. எமது போராட்டத்தின் நியாயத்தினை அனைவருக்கும் புரிய வைத்தது. தமிழீழ விடுதலைப் போராட்டம் புதிய வேகம் பெற்றது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து எம் மண்ணில் கால் வைத்த இந்தியப் படைகள் தமது சுயரூபத்தை ஆதிக்க நோக்கை காட்டத் தொடங்கியபோது தமிழீழமே யுத்தகளமானது. ஆயிரக் கணக்கில் தமிழ் மக்கள் சுட்டும் வெட்டியும் ஈவிரக்கமற்று கொன்று குவிக்கப்பட்டனர். இந்திய டாங்கிகள் குழந்தைகள், பெண்கள் மீது ஓட்டிச் செல்லப்பட்டன. வீதிகள், தெருக்கள், குச்சொழுங்கைகள் எங்கும் குருதி வெள்ளம் பாய்ந்தது. அப்பாவி இளைஞர், யுவதிகள் இந்தியப்படைகளின் பிடியில் சிதையுண்டு போயினர். தமிழீழ கடற்பரப்பிலும் உயிரற்ற உடலங்கள் மிதந்து கொண்டிருந்தன, எங்கும் மரண ஓலமும், ஈனக்குரலுமே ஒலித்த வண்ணம் தமிழீழம் ஒரு மயான பூமியின் நிலயினைப் பெற்று இருளில் மூழ்கியது. கேட்பார் யாரும் இலாதது போல இந்தியப் படைகள் வெறியாட்டம் போட்டுக் கொண்டிருந்த வேளையில்தான் மட்டக்களப்பில்,

19 - 03 - 1988 அன்று

திருமதி பூபதி கணபதிப்பிள்ளை அவர்கள் தமிழ் மக்கள் மீதான அதர்மயுத்தத்தை உடன் நிறுத்து, விடுதலைப் புலிகளுடன் நிபந்தனை அற்ற பேச்சு வார்த்தையை நடத்து என்ற இரு கோரிக்கைகளையும் இந்திய அரசிடம் முன் வைத்து தனது 58 ஆவது வயதில் உண்ணா விரதப்போராட்டத்தை ஆரம்பித்தார்.

கணவன் பிள்ளைகள், குடும்பம் என்ற உறவுகள் இருந்தும் அவற்றையும் விட நாட்டின் மீது கொண்டபற்று தாய் என்ற நிலையில் தனக்கு இப்போராட்டத்தில் இருந்த கடமை அவரை இந்த மகத்தான தியாகத்தை செய்ய முன் வரத் தூண்டியது. இறுதி வரை உறுதியுடன் போராட வைத்தது.

அன்னை பூபதி சாதாரண ஒரு குடும்பப் பெண், ஒரு தாய் காலங்காலமாக பெண்களை ஒடுக்குமுறைக்குள்ளாக்கி வரும் சமூகத்தில் வாழ்ந்தவர். இந்த ஒடுக்குமுறைக் கோட்பாடுகளை உடைத்து பெண்ணாலும் எதையும் சாதிக்க முடியும், நிமிர்ந்து நின்று போராட முடியும் என்ற உண்மையை உலகிற்கு எடுத்துக் காட்டுவதாய் இந்தப் போராட்டம் அமைந்தது.

மிகவும் நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் அன்னையின் போராட்டம் ஆரம்பமானது. தொடர்ந்த தமது சுயரூபத்தை மறைத்து சர்வதேச அரங்கில் எமக்கெதிராக பிரசாரம் மேற் கொண்டிருந்த இந்திய அரசு அன்னையின் போராட்டத்தைக் கண்டு அஞ்சியது. உண்ணா விரதத்தைக் குளப்ப சூழ்ச்சிகள் செய்தது அன்னையின் குடும்பத்திற்கு எச்சரிக்கைகள் அனுப்பப்பட்டன ஆனாலும் அவற்றை எல்லாம் மீறி அன்னையின் உறுதி இறுதிவரை நிலைத்தே நின்றது.

இறுதியாக 19-04-1988 அன்று தனது கோரிக்கைகள் நிறைவேறாத நிலையிலேயே அன்னை எமது போராட்டத்தின் நியாயத்தை உலகிற்கு உணர்த்திவிட்டு இந்திய ஆக்கிரமிப்பிற்கு எதிராக திரண்ட ஒரு வெகுஜன சக்தியை உருவாக வைத்துவிட்டு எம்மைப் பிரிந்தார்.

தமிழர் வரலாற்றிலேயே புதிய அத்தியாயம் படைத்துச் சென்ற தமிழீழப் பெண்ணினத்திற்கு பெரும் பெருமையை தந்து சென்ற அன்னையின் 4 ஆம் ஆண்டு நினைவு நாளிலே தமிழீழப் பெண்கள் அனைவரும் ஓரணிதிரண்டு எமது விடுதலைப் போரை வென்றெடுப்போம் என்று உறுதி எடுத்துக் கொள்வோம். இதுவே அன்னைக்கு நாம் செய்யும் மிகவும் பொருத்தமான அஞ்சலியாக இருக்கும்.

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா சின்னத்துரை

மூளாயைப் பிறப்பிடமாகவும், அராலியில் வாழ்க்கைப்பட்டவரும் இல. 232, சேர் பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா சின்னத்துரை 18-04-1992 காலை காலமாகிவிட்டார். அன்னார் அராலியைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சின்னத்துரை (சிறைச்சாலை மேற்பார்வையாளர்) அவர்களது அன்பு மனைவியும், சிவராசா, திருமதி சிவதேவி முத்துக்குமாரு, திருமதி சித்திராதேவி சிவலிங்கம், சிவகுமார் (இலங்கை வங்கி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்). திருமதி இந்திராதேவி விஜயவேல்குமாரன் ஆகியோரின் அன்புத்தாயாரும், முத்துக்குமாரு (வியாபாரம்), சிவலிங்கம் (சவுதி அரேபியா), விஜயவேல்குமாரன் (இயக்குநர், மிக் இன்டஸ்றீஸ்) திருமதி விஜோஜினி சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், சுப்பிரமணியம் சிவகுரு (Retired Di-rector Ministry of Industries and Scientific Affairs), சுப்பிரமணியம் நடராசா (Retired M. L, T Govern-ment Hospital) ஆகியோரின் அன்புச் சகோதரியும், செந்தூரன், ஆரூரன், மேனகா, ஜனகன், திரிஷா, வித்யாங்கி, நிதர்சன், கார்த்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார் அன்னாரது ஈமக்கிரியைகள் 19-04-92 (இன்று) ஞாயிற்றுக்கிழமை இல 232, திருநெல்வேலி இல்லத்தில் நடை பெற்று தகனக்கிரியைக்காக காலை 10 மணிக்கு குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்

## ஓர் ஆண்டு நினைவஞ்சலி



## ஓராண்டு நினைவஞ்சலி



லெப்டினன்ட் கேணல் கிறேசி

வீரஜனனம் 19-08-1960

வீரச்சாவு 19-04-1991

தகவல்
ந. விஜயவேல்குமாரன்
232, சேர் பொன் இராமநாதன் வீதி, (மிக் இன்டஸ்றீஸ்)
யாழ்ப்பாணம்.

(2484)

## வீரத்தாய் பூபதி
# 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



புடமிட்ட தங்கம் போன்ற பூபதி அன்னை-எம்
இடர் கண்டு நித்தம் வெந்து இறங்கினார்-புனிதப் போரில்
அடலேறு வேங்கைகட்கும், அனைத்து தமிழீழவர்க்கும் இவர்
அன்னையர் திலகமானார் அகிம்சையின் தீபமானர்
நம் தமிழீழவர் நாடு நலிவது கண்டு
செந்தமிழன்னை துயர் துடைக்க விரைந்தார்
இந்தியப் படையினர் நடுவினிலே இடியாய் அன்னை இருந்தார் அத்தனை
இடையூறுகளிலும் திடமனம் கொண்டு திகழ்ந்தார்
வீரப்பெண்களிடையே விடுதலைத் தீயை வளர்த்தார் இவர்
தீரத்தின் திருவுருவாம் தியாகத்தின் பொக்கிசமாம்
அன்னையர் முன்னணித் தலைவியாயிருந்து அமைதிப்
பயினர் ஆட்சிக் கொடுமையை எதிர்த்தார்
அனுதினம் விடுதலை வேண்டியே களத்தில் நெருப்பாய் ஒளிர்ந்தார்

சுபம்

(சி/5288)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 19ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வீரப்பிறப்பு 19.08.60 — வீரச்சாவு 19.04 91

மன்னார் பரப்புக் கடந்தானில் நடந்த நேரடி மோதலில் தன்னை அர்ப்பணித்த

## லெப், கேணல் கிறேசி
### (கணபதிப்பிள்ளை கோபாலபிள்ளை)

நேற்றுப் போல் உமது செயல்கள் எமக்கு - ஆனால்
இன்று உம்மைப் பிரிந்த ஓர் வருடம் எமக்கு
உமக்கும் அது தான் ஓர் வருடம்
நீர் பிரிந்த ஆண்டில் உமக்கோர் செல்வம்
பிரிந்தாலும் நீவீர் எம்முடன் நாம் உம்மிடம்
செய்வோம் என்பது உம் இலட்சியம்
செய்து மடிந்தோர் சரித்திரமானீர்

\- தமிழீழம்

உன் அன்பால் வாடும்

நல்லூர், யாழ்ப்பாணம் — குடும்பத்தினர், உறவினர்
(சி/4285)

# மரண அறிவித்தல்
## செல்வி பாறுவதி வல்லிபுரம்

(ஓய்வு பெற்ற ஆசிரியை
மகா வித்தியாலயம், இராமநாதபுரம்)

புலோலி மேற்கு, வத்தனையை பிறப்பிடமாகவும் இல. 328, இராமநாதபுரம் கிளிநொச்சியை இருப்பிடமாகவும் கொண்ட செல்வி பாறுவதி வல்லிபுரம் 17-04-92 அன்று கொழும்பில் காலமாகிவிட்டார். இவர் அமரர் திருமதி அருந்தவநாயகம் சிதம்பரம் (ஓய்வு பெற்ற அதிபர் இராமநாதபுரம்), திரு. வ. ஆறுமுகம் (திக்கம்) திரு வ. தியாகராசா (திக்கம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு.பெ. சிதம்பரம் திருமதி ஆ. நல்லம்மா, திருமதி தி. கலைஞான சவுந்தரி அம்பாள் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

ஈமக்கிரிகைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

328, இராமநாதபுரம்
கிளிநொச்சி.

தகவல்:-
சி. சிவபாலன் (பெறாமகன்)

(2483)

தியாகச் சுடர்

...வுள்ளனர்.

இதேபோல் தென்மராட்சி பிரிவினால் ஒழுங்கு செய்யப்படும் நிகழ்ச்சிகளில் மகளிர் முன்னணியைச்சேர்ந்த செல்வி இளநிலா தலைமையிலான கூட்டத்தில் திரு. பரா, திரு. தமிழன்பன், செல்வி ஜெயா, திரு. கந்தன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

அம்பாறை- மட்டக்களப்புத் தொடர்பகத்தினரால் ஒழுங்கு செய்யப்படும்நிகழ்வுகள் யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும் அம்பாறை மட்டக்களப்பு மாவட்டத் தொடர்பக இணைப்பாளர் அருணகிரி தலைமையில் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்தில் திரு யோகி, செல்வி மாலினி திரு. புதுவை இரத்தினதுரை, திரு. இளம்பரிதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளனர்.

## சென்மேரிஸ் சனசமூக நிலையம் நாவாந்துறை
## பாலர்கல்விநிதி

சென்மேரிஸ் சனசமூக நிலையபாலர் கல்விநிதிக்காக 19-04-92இல் நாவாந்துறையில் நடைபெற இருந்தசாந்தன் குழுவினரின் இசை நிகழ்ச்சியும், சந்தனக்காடு நாடகமும் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் முத்தமிழ் விழாவை முன்னிட்டு பின் போடப்பட்டுள்ளது. ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட ரிக்கற்றுகள் நிகழ்ச்சி நடைபெறப் போகும் புதிய திகதிக்கு செல்லுபடியாகும் என்பதை அறியத்தருகின்றோம்.

நிர்வாகிகள்
சென்மேரிஸ் சனசமூக நிலையம்

(சி/4290)

[illegible] தலைவனின் வழியில் சென்று
ஈழம் படைக்க வழியில் நெருப்பும் கையில் ஆயுதமும் கொண்டு
பகைவனை குழியில் வீழ்த்தி வீரம் கொண்ட வீரத் தாய் தந்த
வீரச் செம்மலே கிறேசி உன்புகழ்
தமிழ் ஈழத்தில் ஓங்கிய சுதந்திரமாகட்டும்

முழுமதியாய் கண்ட நின்வதனம் பிறைமதியாய்
ஆனதய்யாவீரத்துடன் சென்று போராடகாலான்
உன்னை வீறுடன் இழுத்துச் சென்றனையோ
எங்கள் நினைவாலயத்தில் ஓராண்டு ஆனாலும்
உம் வீரச் செயல்கள் மாறாது தளைத்திடும்

விண்ணில் விருட்சமாகிய நீர் எம் ஈழ மண்ணில்
வித்தூன்றி விட்டீரே உமது பூந்துளிரே
தந்தையின்றி வாடுதம்மா இரக்கமில்லாக் காலான்
உம்மை இரையாக்கிக் கொண்டானோ
அழகான பெயராம் கோபாலறஞ்சனி என்றோ
உமது அன்புப் புதல்விக்கு அடையாளம் காணாத ஆருயிரே

நீர் எங்கே ... பாராது சென்றனையோ
விழிகளில் வீரம் சேராது உம் பெயரால்

வானக் கருவியால் மடிந்தீர் ஆனாலும் இன்றும்
வாழ்ந்து கொண்டு இருக்கின்றீர்சென்றீர் சிந்தினீர்
புதிய புலிவீரனாக புலிவீரருடன் நீர் சேர்ந்து
வாழ்ந்த காலங்கள் பல திருமணமாகி வாழ்ந்த காலங்கள் சில

எம் மனங்களிலே ஊற்றாகிய ''கிறேசி'' அண்ணா
உம்மை இந்நாளில் நினைவு கூருகிறோம்.

(4294)

மகளிர் படைப் பிரிவு

23-4-92

காலை 9 மணி

தாவரவியல்
ஐங்கரநேசனின்
யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

(சி/4293)